**செய்தி வெளியீடு: 161** **3.3.09**

**தமிழ் நாடு மாநில ஹஜ் குழுமூனறாம் தளம், ரோஸி டவர், எண்.13, மகாத்மா காந்தி சாலை,நுங்கம்பாக்கம், சென்னை–600 034.**

தமிழ் நாட்டில் வசிக்கும் முஸ்லிம் பெருமக்களில், ஹஜ்–2009 ஆம் ஆண்டில் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்களை பெறுமாறு மும்பை, இந்திய ஹஜ் குழு, தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவிற்கு தெரிவித்துள்ளது. இப்பயணத்திற்கான விண்ணப்பங்கள், சென்னை–34, புதிய எண்.13 (பழைய எண்.7), மகாத்மா காந்தி சாலை (நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை)யில், ரோஸி டவர், மூன்றாம் தளத்தில் அமைந்துள்ள தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் நிர்வாக அலுவலரிடமிருந்து <u>5–3–2009</u> முதல் பெற்றுக் கொள்ளலாம் அல்லது **www.hajcommittee.com** என்ற இணைய தளம் மூலமாகவும் விண்ணப்ப நகல் எடுத்து கொள்ளலாம். ஹஜ் குழுவின் விதிமுறைகளின் அடிப்படையில் இரத்த-உறவுமுறையுள்ள குடும்ப நபர்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள் ஒரு குழு/உறையில் ஐந்து நபர்களுக்கு மிகாமல் உள்ளடங்கியதாக இருக்கவேண்டும். இவ்வுறையில் <u>அந்நியர்</u> எவரையும் சேர்க்கக்கூடாது. ஒரு குழுவில் விண்ணப்பிக்கக் கூடிய பயணிகள் <u>ஒரே</u> மாவட்டத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, பயணி ஒருவருக்கு <u>ரூ.200/-</u> (ரூபாய் இருநூறு மட்டும்)–ஐ பரிசீலனைக் கட்டணமாக (Processing fee) பாரத ஸ்டேட் வங்கியில், மத்திய ஹஜ் குழுவிற்கான நடப்புக் கணக்கு எண்.30683623887–ல் செலுத்தி அதற்கான வங்கி ரசீதின் நகலுடன் தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவிற்கு சமர்ப்பிக்கவேண்டும். பரிசீலனைக் கட்டணமாக நபரொன்றுக்கு செலுத்தப்படும் <u>ரூ.200/-</u> திருப்பி அளிக்கப்பட மாட்டாது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் <u>31–3–2009</u> ஆகும்.

3. இந்திய ஹஜ் குழுவால் நிர்ணயம் செய்யப்படும் ஒதுக்கீட்டின் அடிப்படையில், தேவைப்படின் கணினி மூலமான குலுக்கலில் புனிதப்பயணிகள் தெரிவு செய்து, தெரிவு செய்யப்பட்ட புனிதப் பயணிகளின் விபரத்தை, தமிழ் நாடு மாநில ஹஜ் குழு அவர்களுக்கு தெரிவிக்கும். அவ்வாறு குலுக்கலில் தெரிவு செய்யப்பட்ட புனிதப் பயணிகள், பின்னர் அந்நியச் செலாவணி, விமானக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்களுக்கான 30% தொகையுடன் முழுமையான விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கவேண்டும். மீதமுள்ள 70% தொகையினை <u>31–8–2009</u>-ற்குள் செலுத்தவேண்டும்.

4. பன்னாட்டு கடவுச் சீட்டில் மட்டுமே (Passport) ஹஜ் பயணத்திற்கான விசா வழங்கப்படும் என சவுதி அரேபிய அரசு அறிவித்துள்ளதால், ஹஜ் புனிதப் பயணத்தை மேற்கொள்ள விரும்புவோரில், தெரிவு செய்யப்படுவோர் அனைவரும் பன்னாட்டு கடவுச் சீட்டு பெறவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உறுப்பினர்–செயல் அலுவலர்.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9